# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
## வழக்கு எண்: CC –243/2023

**வழக்கு சாட்சி : LW1 (PW1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணபதிநாச்சியார் | தொழில் | : | கடை வைத்துள்ளார் |
| கணவர் பெயர் | : | ஐசக் பாண்டியன் | சமயம் | : | |
| கிராமம் | : | சங்கரன்கோவில், தென்காசி | வயது | : | 45 |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**(எதிரிகள்ஆஜர் இல்லை .எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on** the **day 30th day of January 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :–**

1. நான் தற்போது சங்கரன்கோவில், தென்காசியில் குடியிருந்து வந்து கடை வைத்து நடத்தி வருகிறேன். பட்டியல் சாட்சி 2 எனது கணவர் ஆவார். எனக்கு பட்டியல் சாட்டி 5 அரசி மகள் ஆவார். மற்ற பட்டியல் சாட்சிகள் 6 முதல் 8 வரை உள்ளவர்களை தெரியும். பட்டியல் சாட்சி 3 ஷேக்தாவுத், பட்டியல் சாட்சி 4 காதர்பாட்ஷா என்பவர்களை தெரியாது. எதிரிகள் பி.டி.ரவி, சுரேஷ் ஆகிய இருவரையும் தெரியும் ( இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை). கடந்த 16.05.2023 ம் தேதி காலை 11.00 மணியளவில் DSP அலுவலகத்திற்கு விசாரணைக்கு வந்தோம். அந்த விசாரணை எதற்கு என்றால் 15 இலட்சம் ரூபாயை பி.டி.அரசகுமாருக்கு கொடுத்திருந்தோம் . அந்த சம்பவம் அவருடைய மச்சான் 2வது எதிரி சுரேசிற்கும் மற்றும் 1வது எதிரியின் தம்பி இவர்களுக்கு தெரியும். விசாரணை அந்த அலுவலகத்தில் நடந்து கொண்டிருக்கும் போது நான் உன்னை அடித்துவிடுவேன் என்று இரண்டு பேரும் அதாவது எதிரிகள் இருவரும் சொன்னார்கள். அவர்களுடன் நான்கு, ஐந்து நபர்களும் வந்தார்கள்.

2. அவர்களும் சேர்ந்து சொன்னார்கள். அப்போது அங்கு இருந்த காயத்ரி மேடம் இங்க பேசாதீங்க வெளியில் போய் பேசுங்கள் என்று சொன்னார்கள். உடனே, நானும் , எனது கணவர் மற்றும் எங்களுடன் வந்தவர்கள் எல்லோரும் வெளியே வந்துவிட்டோம். அப்போது மதியம் சுமார் 12.00 மணி இருக்கும். பி.டி.ரவி குடிக்கிறதுக்கு

சாராயம் வாங்கி வரச் சொல்லி அவருடன் வந்தவர்களுக்கும் வாங்க சொல்லி நாங்க வந்த காரை மறித்து எங்களை அசிங்கமாக திட்டினார் என்ன வார்த்தை என்றால் ஒத்த ஒழியம்மா என்று அசிங்கமாக திட்டி, எங்களை கம்பு, கட்டை ஆகியவற்றால் தாக்க வந்து 1வது எதிரி ரவி எங்க அண்ணன் கட்சியில் இருக்கான் , பெரிய பதவியில் இருக்கான், அய்யா மு.க.ஸ்டாலின் உடன் இருப்பதால் உன்னை என்ன வேணுமானாலும் செய்துவிடுவேன் என்று கூறி பிறகு ஊரில் வந்து உன்ன வெட்டி விடுவேன், தடுக்க முடிந்தால் தடுத்து பாரு என்று எதிரிகள் இருவரும் கூறினார்கள். பிறகு இந்த வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். பிறகு CM செல்லுக்கும் புகார் கொடுத்தோம். தற்போது சமூகம் நீதிமன்றத்தில் காட்டப்படும் CM செல்லுக்கு கொடுத்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எ.த.கு.வி</u>

இல்லை.